OS.No.16/2024 (205/2015)
Date: 26.02.2026
PW-1 இந்திராணி, க/பெ. லேட்.சின்னத்தம்பி

**<u>கூடுதல் குறுக்குவிசாரணை</u>**

இந்த வழக்குச் சொத்தை எப்போது நான் கிரையம் பெற்றேன் என்றால் 2009ம் ஆண்டு கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ள தாய் பத்திரத்தை தான் தற்போது நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்தபோது இப்போது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.28ன் புகைப்பட நகலைத்தான் தாக்கல் செய்தேன் என்றால் பத்திரம் தான் தாக்கல் செய்தேன். அசல் பத்திரம் என்னிடம் தற்போது உள்ளதா என்றால் வழக்கறிஞரிம் உள்ளது. 20.03.2009ம் தேதியிட்ட அசல் ஆவணம் என்னிடம் இல்லை நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் அனைத்து அசல் ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி சிவக்குமாரின் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் தாவா சொத்தில் எந்த மாதிரியான HP மோட்டார் உள்ளது என்றால் 5HP மோட்டார் உள்ளது. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் 20.03.2009ம் தேதியிட்ட ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள பிச்சாண்டி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவர்தான் எனக்காக வந்து சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோதே சான்றிட்ட நகலை தாக்கல் செய்திருக்கலாம் வேண்டும் என்றே நகலை தாக்கல் செய்து இந்த வழக்கு முடிவுபெறுவதை காலதாமதம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஒரு தவறான பரிகாரத்தை கேட்டுள்ளேன் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்